முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

நாள்: 01.09.2025 அ.வ.எண்.55/2016, வா.சா.1. முத்துசாமி, த/பெ, ரங்கசாமி

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை தவிர வேறு ஆவணங்கள் ஏதேனும் கோவில் எங்களுக்கு பாத்தியப்பட்டது என்பதை காண்பிக்க உள்ளதா என்றால் இல்லை. கோவிலை நிர்வாகம் செய்யும் பெரியவர்கள் பேரிலோ அல்லது கோவில் சாமி பெயரிலோ கிரயப்பத்திரம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. எப்போது கோவில் கட்டலாம் என்று முடிவு செய்தோம் என்றால் 2019 ம் ஆண்டு கோவில் கட்டுவதாக முடிவு செய்தோம். கோவிலை கட்டுவதற்கு திப்பம்பட்டி ஊர் பொதுமக்களை கூட்டி பேசி முடிவு எடுத்த பின்பு தான் கோவிலை கட்டினோம் என்றால் தேவாங்க சமூகத்தை சேர்ந்தவர்கள் 10 குடும்பம் தான் உள்ளோம் அவர்களிடம் பேசி முடிவு எடுத்தோம்.

2) கோவிலை கட்டுவதற்கு திப்பம்பட்டி கிராம மக்களிடம் நன்கொடை வசூல் செய்தோம் என்றால் சரிதான். கணக்கு வழக்கு உள்ளது என்றால் கணக்கு வழக்குஇல்லை விருப்பப்பட்டு கொடுத்தார்கள். இந்த வழக்கின் பிரதிவாதிகளும் கோவில் கட்ட நன்கொடை அளித்தார்கள் என்றால் சரிதான். கோவிலை இடித்துவிட்டு கருவறை கட்டி முன் மண்டபம்கட்டும் வரை பிரதிவாதிகள் பிரச்சனை செய்யவில்லை என்றால் சரிதான். கோவில் இருக்கும் வீதியில் தான் பிரதிவாதிகளின் வீடும் உள்ளது என்றால் சரிதான் கோவிலுக்குதென்புறமாக பிரதிவாதிகளின் வீடு உள்ளது என்றால் சரிதான். கோவிலுக்கு கிழபுறம் உள்ள குப்பண்ணபிள்ளை வீடு என்றால் சரிதான் தற்போது அது யாருக்கு பாத்தியம் என்றால் தெரியாது.

ஒப்பம்/- (R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

3) நான் திப்பம்பட்டி கிராமத்தில் எத்தனை ஆண்டுகளாக உள்ளேன் என்றால் பிறந்து வளர்ந்தது முதல் 70 ஆண்டுகளாக உள்ளேன். கோவிலுக்குவடபுறம் மயிலாத்தாள் என்பவருக்கு பாத்தியப்பட்ட வீடு உள்ளது என்றால் சரிதான். மேற்படி வீட்டை அவரது மகன் நடராஜ், ஆறுமுகம் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். அவர்கள் வீட்டிற்குமதில் சுவர்உள்ளது என்றால் சரிதான். கோவில் இடிப்பதற்கு முன்பு என்ன அளவு இருந்தது என்றால் தெரியாது. சுமார் 10 x 16 அளவிற்கு கட்டிடம் இருந்தது என்றால் சரிதான்.

4) வா சா ஆ 4 ஆவணத்தில் குறிப்பிட்டு காண்பித்துள்ளது தான் கோவில் இருந்த இடம் என்றால் சரிதான். அதில் 5.6 மீ நீளமும், 4.2 மீ அகலமும் என்றுள்ளது என்றால் சரிதான். கோவிலுக்கும், பிரதிவாதி வீட்டிற்கும் இடையில் 2.2 மீ அளவிற்கு இடம் உள்ளது என்றால் சரிதான். கோவில் இடித்ததில் இருந்து எவ்வளவு நாட்களுக்குள் கோவில் கட்டினோம் என்றால் 3 வருடத்திற்குள் கட்டினோம். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை. பிரமாணபத்திரிக்கையில் 1, 2 பிரதிவாதிகள் கோவிலின் தென்புறம் சுவற்றையும் கிழபுற சுவற்றையும்கட்டவிடாமல் அவர்களுக்கு பாத்தியப்பட்டது என்று உரிமை கொண்டாடி தடுத்து வந்தார்கள் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். அவர்கள் தடுத்தது சுற்றுச்சுவர் கட்டுவதைத்தான் என்றும் கோவில் கட்டுவதை தடுக்கவில்லை என்றால் சரிதான்.

5) அப்போது நானும் திப்பம்பட்டி கிராமத்தினர் அனைவரும் சேர்ந்து பொள்ளாச்சி சார் ஆட்சியரிடம் ஒரு மனு கொடுத்ததாக மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதில் பிரதிவாதிகள் கோவில் நிலத்தை 4 மீட்டர்

ஒப்பம்/– (R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

நிலத்தை ஆக்கிரமிப்பு செய்ததை மீட்க சென்ற போது பிரச்சனை செய்ததாக குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். 4 மீ நிலத்தை நீதிமன்றத்திலிருந்து உத்தரவு பெற்றதற்கு பின்னிட்டு தான் சுற்றுச்சுவர் கட்டினோம் என்றால் தென்புறத்தில் இது நாள்வரை மதில்சுவர் கட்டவில்லை. மேற்படி இடத்தை அளக்கவேண்டும் என்று சர்வேயரிடம் மனு கொடுத்து அளந்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். சர்வேயர் அளப்பதற்கு முன்பு நாங்கள் எப்போதாவது அளந்தோமா என்றால் இல்லை. கோவிலுக்கு மேற்புற எல்லை சாய்வாக உள்ளது என்றால் இல்லை நேராகத்தான் உள்ளது. கோவிலுக்கு மேற்புற எல்லை சாய்வாய இருந்தது என்றும் அதை நேராக கட்டுவதற்காக பிரதிவாதிகளிடம் இருந்துநிலத்தை பெற்று அடித்தளம் அமைத்தோம் என்றால் சரியல்ல, எங்களிடம் இருந்த அளவுகளின் படி அளந்து கட்டினோம். நில அளவையர் அளந்ததற்கு பின்னிட்டு வழக்குச்சொத்தின் மேபுற எல்லை கட்டிடத்தின் தரைதளம் நேராக இருந்தாலும் வடசரிவாக வேலி அமைத்து தான் அனுபவித்து வருகிறோம் என்றால் வேலி எங்களுடையது அல்ல பிரதிவாதிகள் அமைத்தது ஆகும். அந்த வேலியை நீக்குவதற்கு நீதிமன்றத்தில் எவ்வித பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரிதான்.

6) மேற்படி வேலி சர்வேயர் அளந்ததற்கு பின்னிட்டு நாங்களே அமைத்துக்கொண்டதால் தான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் 2 அடி இடம் விட்டு தான் வடபுறத்தில் வீடுகட்டியுள்ளார்கள் என்றால் சரியல்ல. கோவிலின் தென்புறமும் பிரதிவாதிகளின் வீட்டின் வடபுறமும் 6 அடி அகலமும் 35 அடி நீளமும் உள்ள பொது நடை தடம் சதுரஅடியில் இருந்தது என்பது தெரியாததால் தான் அதை அளவுகள் குறிப்பிடாமல் தாவா தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

ஒப்பம்/– (R. சுஜாதா)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

இருந்தது அதை ஆக்கிரமித்து தான் நான் கோவில் கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள தாவாவில் கோவில் எத்தனை சதுரஅடி அளவில் உள்ளது என்று கூறவில்லை என்றால் சரிதான். கோவில் எவ்வளவு கோவில் பழைய அளவுகள் எவ்வளவு இருந்ததோ அந்த அளவிற்கு தான் தற்போது புதியதாக கோவில் கட்டியுள்ளோம் என்றால் சரிதான்

7) பழைய கோவில் இருந்த அளவிற்கு கூடுதலாக நாங்கள் கோவில் கட்டியிருந்தால் அந்த கூடுதல் இடம் எங்களுடையது அல்ல என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் கோவில் கருவறை கட்டிவிட்டோம் என்றால் சரிதான். வழக்கு போடும் போது 150 ஆண்டு பழமையான கோவில் கட்டிடம் எதுவும் வழக்கு சொத்தில் இல்லை என்றால் சரிதான். ஆனால் வழக்கு தாக்கல் செய்த போது சொத்து விவரத்தில் 150 வருட பழமையான கோவில் என்று காட்டி பரிகாரம் கோரியுள்ளோம் என்றால் சரிதான். கோவிலுக்கு கிழபுறமாக பஞ்சாயத்து வீதி உள்ளது என்றால் சரிதான். பஞ்சாயத்து வீதி கோவில் கட்டுவதற்கு முன்பே மண்வீதியாக இருந்து தற்போது சிமெண்ட் வீதியாக மாறியுள்ளது என்றால் சரிதான்.

8) மேற்படி சிமெண்ட் சாலை அமைத்த போது நானோ திப்பம்பட்டி ஊர் மக்களோ ஆட்சேபணை எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். கோவில் கட்டுவதற்கு திப்பம்பட்டி ஊராட்சி அல்லது HR and CE அனுமதி பெற்றுள்ளோமா என்றால் இல்லை அனுமதியில்லாமல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

ஒப்பம்/– (R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.